[25th January 1972

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : டீச்சிங் ஹாஸ்பிட்டலாக இருக்கிற மருத்துவ மனைகளில் தான் தொடர்ந்து ஏழு நாட்களும் வேலையிருக்கும். வேறு சில மருத்துவ மனைகளில் ஏழு நாட்களும் வேலை இருப்பதில்லை.

Greater Madras

* 26. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(*a*) whether the Government have submitted any plan for greater Madras to the Union Planning Commission ; and

(*b*) if so, details thereof?

சென்னைப் பெருநகர்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னைப் பெருநகருக்கான திட்டம் ஏதையாவது அரசு மத்திய திட்டக் குழுவுக்குப் பணிந்தனுப்பியுள்ளதா?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) சென்னைப் பெரு நகர்ப் பகுதியின் வளர்ச்சிக்கான சென்னைப் பெருநகர்த் திட்டம் "1971-1991" 20 ஆண்டுக் காலத்தில் நிறைவேற்றக்கூடியபடி ஒன்று 1971, ஜுன்திங்களில் இந்திய அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இத்திட்டத்திற்காக, இருபதாண்டு நீண்டகால முதலீடாக ரூபாய் 938 கோடியும், அடுத்த ஐந்தாண்டுக் காலத்தின் குறுகிய கால முதலீடாக ரூபாய் 185 கோடியும் தேவைப்படுகிறது. வேலை வாய்ப்பு, வீட்டுவசதி, குடிதண்ணீர் வழங்கல், போக்குவரத்துத் தேவைகள், கல்வி சுகாதாரம் பொழுதுபோக்கு வசதிகள் உள்ளிட்ட சமுதாய நலன்கள் போன்ற துறைகளில் சென்னை பெருநகர்ப் பகுதிக்கு குறுகிய கால, நீண்ட காலத்தேவைகளை இத்திட்டம் மதிப்பிட்டதுடன், படிப்படியாக இத்தேவைகளை நிறைவு செய் வதற்கான வழிகளைக் குறித்தும் கருத்துத் தெரிவித்திருக்கிறது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக இந்திய அரசிட மிருந்தும் உலக வங்கி போன்ற அனைத்து நாடுகள் நிறுவனங்களிட மிருந்தும் நிதியுதவி வேண்டப்பட்டுள்ளது.

THIRU G. SWAMINATHAN : Sir, I remember a report was submitted by the former Commissioners of the Corporation of Madras, Thiru K. J. M. Shetty and Thiru C. Badrinath, and that report was sent to the Government. I want to know whether that report will be placed on the table of the Legislature so that there may be a discussion. Again, there was a proposal that there should be a Development Authority constituted including the M.L.As and M.L.Cs. May I know whether such a Development Authority, as it is constituted in New Delhi, will also be created in Madras City for the purpose of development of Madras ?

25th January 1972]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்த அறிக்கையைப் பொறுத்த வரையில், ஏற்கெனவே தெரிவிக்கப் பட்ட ஆலோசனையைக் கருவாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஆலோசனையாகத்தான் இது இருக்கிறது. ஏற்கெனவே இருந்த ஆணையர்கள் தெரிவித்த கருத்தெல்லாம் பின்னர் பல்வேறு பரிசீலனைக்கு ஆளாகி மறுபடியும் ஆராயப்பட்டு இது சம்பந்தமாக, "A team of World Bank officials including Mr. Vestory, Chief Urban Development Division visited Madras in November 1969." என்று அவர்கள் இங்கு வந்திருந்து பல்வேறு ஆலோசனைகளை நடத்தி ஒரு விரிவான திட்டமாக இது கருதப்பட்டு மத்திய அரசு இதற்கு அனுமதி வழங்குவது மட்டுமல்லாமல், வெளியிலிருந்து பொருள் உதவி செய்யக்கூடிய உலக வங்கி போன்ற அமைப்பு இதற்கு உதவ முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக் கிறது. இந்தத் திட்டம் அடிப்படையில் முன்னர் தெரிவிக்கப்பட் டிருந்தாலும், விரிவாக ஆராயப்பட்டு தெரிவிக்கப்பட்டது. இது புறநகர் வளர்ச்சித் திட்டத்தையும் உள்ளடக்கிய ஒன்றாகும்.

THIRU G. SWAMINATHAN : Sir, may I know whether there is any proposal to have another Marina in the North Madras area ? I remember that was one of the recommendations of that Committee.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இன்னொரு மெரினா என்று சொல்கிற அளவுக்கு இடவசதி சென்னை நகர ஓரத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் அங்குள்ள கடற்கரையைச் சுத்தப்படுத்தவோ, ஒழுங்கு படுத்தவோ வேண்டு மானால் செய்யலாம். அதற்குக் கூட வடக்குப் பகுதி அவ்வளவு பொருத்தமானதாக இன்றைக்கும் இல்லை என்பது சென்று பார்க் கிறவர்களுக்கு நன்றாகத் தெரியும். மக்கள் தொகை தானாகவே பெருகி நெருக்கம் காரணமாக எதிர்காலத்தில் போக்குவரத்து முதலியவை தடைப்படுமானால், அப்படி ஏற்படாத வகையில் நகரத்தின் மையப்பகுதி விளங்குவதற்கும் சென்னை நகரைச் சுற்றிலும் 450 சதுர மைல் அளவுக்குள் சிறு நகரங்களை முன் கூட்டியே முறைப்படுத்தி ஒரு அமைப்புக்கு உட்படுத்தி வளர்ப்ப தற்கு வழி செய்வதன் மூலமாக, வளர்ந்தால் இப்படித்தான் வளர வேண்டுமென்ற வழிவகுப்பதன் மூலமாக. சென்னை நகரத்தின் வளர்ச்சிக்கு குந்தகம் இல்லாமல் பாதுகாப்பதுதான் இந்தத் திட்டத்தின் பெரியநோக்கமாகும்.

THIRU A. R. DAMODARAN : Sir, a Plan for Rs. 930 crores has been prepared—obviously a perspective plan—for the next 20 years. How is it, Sir, that we either in the Legislature or even the members of the general public have no idea of such a plan being prepared ? May I request the Hon. Minister to have this information at least published in the magazine of the Tamil Nadu Government so that the general public may discuss this matter and make suggestions?

[25th January 1972

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, திட்டமிடுவது என்பதைப் பற்றிய பொதுவான கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். இன்றைய தேதியில் திட்டமிடுகிறபொழுது இப்படிப்பட்ட எண்ணத்தோடு என்றுதான் பொருளே தவிர ரூ. 938 கோடி செலவழிக்கப்படுமென்றும் இந்தச் செலவோடு நின்றுவிடுமென்றும் சொல்ல முடியாது. ஒரு வேளை 20 ஆண்டு காலத்தில் என்று மேற்கொள்ளப்படுவதை முடிக்க 30 ஆண்டுக் காலம் கூட ஆகலாம். இப்படிப்பட்ட திட்டத்தினால் எந்த வழியில் முன்னேறுகிறோம், எந்த வகையான அமைப்புக்கு உட்படுகிறோம் என்று தெரியும். மத்திய அரசு ஒப்புக்கொண்டால், 5 ஆண்டுக் காலத்திற்குள் குறுகிய திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன் கூட்டியே, அது நிறைவேறுவதற்கான முயற்சியை எடுத்துக்கொள்ளும்போது, பொது மக்களுக்கு விளக்கமாகத் தெரிவிக்க வாய்ப்பு ஏற்படும்.

Erskine Hospital, Madurai

* 27 Q.—THIRU G. SWAMINATHAN (on behalf of Thiru D. SANTOSHAM) Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(*a*) whether there are facilities for fitting artificial limbs to patients whose limbs are amputated in the Erskine Hospital at Madurai; and

(*b*) if not, whether there is any proposal to set up a suitable unit at Madurai?

எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) உறுப்புகள் வெட்டியெடுக்கப்பட்ட நோயாளிகட்கு செயற்கை உறுப்புகள் பொருத்துவதற்கு மதுரை எர்ஸ்கின் மருத்துவமனையில் வசதிகள் உள்ளனவா?

(இ) இல்லையெனில் அதற்கான தக்க பிரிவு ஒன்றை மதுரையில் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Rice Smuggling

*28. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state the number of donkey impounded in connection with the rice smuggling cases near Tamil Nadu–Kerala border during 1970–71 ?